BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# மின்சக்தி ஆற்றல் கொண்ட தீயணைப்பு ட்ரக்கை உபயோகிக்கின்ற முதலாவது நகராட்சியாக ப்ராம்ப்ட்டன் நகரம் இருக்கப்போகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 16, 2021) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவை அமைப்பின் திட்டப்படி, முன் வரிசை தீயணைப்பு வண்டியாக முழுக்க முழுக்க மின்சாரத்தில் இயங்குகின்ற ரோஸன்பாவர் ஆர் ட்டி (Rosenbauer RT) எனும் வண்டியை முன் நிறுத்த ஒப்புதல் வழங்கியது.

ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும், இது நிலைத்து நிற்கும் தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கும் சுற்றுச்சூழலுக்கான புதுமை படைப்புக்களில் முன்னணியாளராக இருப்பதற்கும் கடமை கொண்டுள்ளது. ரோஸன்பாவர் ஆர் ட்டி (Rosenbauer RT) என்பது சந்தையில் கிடைக்கின்ற, முதல் முதலான, முழுக்கவும் மின்சக்தி ஆற்றலால் இயங்குகின்ற தீயணைப்பு வண்டி ஆகும்; இது தற்போதைய தீயணைப்பு தரங்களை நிறைவேற்றக்கூடியது. ஒன்ட்டேரியோவில் மின்சாரத்தால் இயங்குகின்ற முன் வரிசை அவசரகால செவி சாய்ப்பு வாகனத்தைப் பயன்படுத்தும் முதல் நகராட்சியாக ப்ராம்ப்ட்டன் நகரம் திகழவிருக்கிறது, மேலும் பெர்லின், ஆம்ஸ்டர்டாம், துபாய், லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் வான்கூவர் போன்ற உலகத் தரம் வாய்ந்த நகரங்களுடன் இணைகிறது.

இந்த டிரக்கின் தொழில்நுட்பமானது, ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு வீரர்கள் பயணிக்கும்போது மட்டுமல்லாமல், களத்திலிருந்தபடியும் அவசரநிலைகளுக்கு செவிசாய்க்கும் போது பூஜ்ஜியம் அளவிலான உமிழ்வை உருவாக்க உதவும். களத்தில் இருக்கும்போது உமிழ்தலை அகற்றுவது என்பது, சுற்றுச்சூழல் மற்றும் கார்சினோஜென்களை சுவாசிப்பதைத் தடுத்து தீயணைப்பு வீரர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பையும் காக்கிறது.

முழுக்கவும் மின்மயமாக்கப்பட்ட இந்த வாகனத்தின் கூடுதல் சிறப்புக்களாவன: பயணிகள் பேருந்தினைப் போலவே, சவாரி செய்வதற்கான உயரங்களை உயர்த்தி, குறைக்கும் வசதி கொண்டது; இதனால் வாகனத்திற்குள் எளிதில் நுழைந்து வெளியேற முடிகிறது. இந்த வசதி இருப்பதால், களத்தில் இருக்கும்போது தீயணைப்பு வீரர்கள் சாதனங்களை எளிதில் அணுகி எடுப்பதற்கான உயரத்தையும் குறைக்கிறது. சவாரிக்கான உயரத்தை 6.8 அங்குலம் இறக்கலாம் மற்றும் 18.5 அங்குலத்திற்கு உயர்த்தலாம், இதனால் வெள்ளம் பாயும் இடங்களில் நீர் புகாதபடி வேலை செய்ய அனுமதிக்கிறது. புதிய தீயணைப்பு வண்டியைக் கொண்டு நகரின் புதிய துணைப்பிரிவு இடங்களில் நெருக்கலான இடங்களிலும், குறுகிய சாலைகளிலும் மிகவும் திறமையாகக் கையாள குழுவினருக்கு உதவியாக இருக்கிறது; மேலும் பணிச்சூழலியல் தொழில்நுட்பங்களில் மிக சமீபத்திய தொழில்நுட்பத்தை

பிரயோகித்து, அதன் மூலம் தீயணைப்பு வீரர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்துகிறது.

புதிய மின்சார தீயணைப்பு வண்டி தற்போது கட்டுமானத்தில் உள்ள புதிய, அதிநவீன ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு வளாகத்தில் நிறுத்திவைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நகர நிர்வாகத்திடம் 2022 இன் பிற்பகுதியில் இந்த டிரக் வந்து சேரும்.

ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவை பற்றி மேலும் அறிய வருகை தரவும்: www.bramptonfire.com. நகரின் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயமாகிய ”ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம்” என்பது பற்றி அறிய வருகை தரவும்: www.brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரை ஒரு பசுமை நகரமாக ஆக்க நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் நிலைத்து நிற்கவல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்கவே நாங்கள் பணியாற்றி வருகிறோம். ஒன்ட்டேரியோவின் முதன் முதலான, முழுக்கவும் மின்சாரமயமான, தீயணைப்பு வண்டியைப் பெறுவதற்கு ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் அமைப்பு மேற்கொண்ட முயற்சிக்ளை நான் பாராட்டுகிறேன். ப்ராம்ப்ட்டன் ஒரு உலகத் தரம் வாய்ந்த நகரமாகும்; எங்கள் சமூகங்களை பாதுகாப்பாக வைத்திருக்கும்போதே, காலநிலை மாற்றமாவதில் பின்னடைவை அதிகரிக்கச் செய்வதிலும், உமிழ்வுகளை குறைப்பதிலும், அதற்காக உழைக்கும் மற்றவர்களுடன் சேருவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

ப்ராம்ப்ட்டன் ஒரு புதுமை படைக்கும் நகரம்; எங்கள் நிலைத்து நிற்கும் தன்மையை மேம்படுத்துவதற்கும் எங்கள் குடியிருப்பாளர்களையும் ஊழியர்களையும் பாதுகாப்பதற்கும் நாங்கள் எப்போதும் புதிய வழிகளையே தேடுகிறோம். இந்தப் புதிய முழுக்கவும் மின்சாரமயமான தீயணைப்பு வண்டி, ஆபத்தை குறைக்கும் மற்றும் எங்கள் அர்ப்பணிப்பு நிறைந்த தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் குழு வீரர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்தி, எங்கள் சமூகத்தில் உமிழ்வையும் குறைக்கும். ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு சேவைகள் அமைப்பு பசுமை தொழில்நுட்பத்திற்கு வழிகாட்டும் ஒரு ஒளிச்சுடராக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். ”

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமூக சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர கால சேவை வீரர்கள் சார்பாக, ரோஸன்பாவர் ஆர் ட்டி (Rosenbauer RT) எனும் முழுக்க முழுக்க மின்சாரமயமான தீயணைப்பு வண்டி வருவது குறித்து எங்கள் பரவசத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். இந்த டிரக் பல சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கிறது; களத்தில் கார்சினோஜென்களைக் குறைப்பதில் இருந்து, பணிச்சூழலியல் தொழில்நுட்பங்களில் சமீபத்திய நுட்பம் புகுத்தியது வரை, பல அற்புதமான அம்சங்களைக் கொண்டுள்ளது; மேலும்

சுற்றுச்சூழலின் நிலைத்திருக்கும் தன்மையில் ஒரு முன்னணியாளர் ஆவதற்கு இது உதவும். எங்கள் சமூகத்தைப் பாதுகாப்பதற்காக, இதைப் புகுத்துவதை நாங்கள் எதிர்நோக்கி காத்திருக்கிறோம். ”

- பில் போயெஸ், தலைவர், ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசர காலசேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்

"ப்ராம்ப்ட்டன் நகரத்தின் பணியாளர்கள், எங்கள் செயல்பாடுகளில் நிலைத்திருக்கும் தன்மையை மேம்படுத்துவதற்கும் கவுன்சிலின் ஆயுட் காலத்தை முன்னுரிமை கொண்ட விஷய மாகிய ‘ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம்’ எனும் பணியை முன்னெடுப்பதற்கும் தங்களை அர்ப்பணித்துள்ளனர். ஒரு புதிய முழுக்க முழுக்க மின்சாரமயமான தீயணைப்பு வண்டியை புகுத்துவதன் மூலம், ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பனது, உமிழ்வைக் குறைக்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கான புதுமை படைப்புகளில் ஒரு முன்னணியாளராகத் திகழ்ந்து உலகத் தரம் வாய்ந்த பிற நகரங்களுடன் சேரும். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca